பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

02 10 2026 7 15

வெள்ளிக்கிழமை காலை

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசப்பிதா மகாத்மா காந்தியின் போதனைகள் தற்போதைய புவிசார் சூழலுக்கு உகந்த வகையில் உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌ முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

2. விமான நிலையங்களில் பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. இந்தியா – பல்கேரிய இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

4. மிசோரம் தலைநகர் ஐஸ்வாலில் நேரிட்ட சாலை விபத்தில் இந்திய தகவல் பணி உயிரதிகாரிகள் 2 பேர் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியின் வில்வித்தை மகளிர் ரிக்கர்வ் குழு பிரிவில் இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><>

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 157ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் உள்ள ராஜ்காட்டில் அவரது நினைவிடத்தில் சர்வமத பிரார்த்தனை நடைபெறுகிறது.

இத்தினத்தையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில் அமைதி, அஹிம்சை குறித்த மகாத்மா காந்தியின் போதனைகள் தற்போதைய புவிசார் சூழலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது பிறந்த தினத்தையொட்டி அன்னாருக்கு மரியாதை செலுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

காந்தியின் வாழ்க்கை வரலாறு மற்றும் போதனைகள் உலகளவில் பெரு மதிப்பை பெற்றுள்ளதை குடியரசுத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<><><><><><><>

முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் 122ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1904 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி உத்தரப்பிரதேசத்தில் உள்ள முகல்செராயில் பிறந்த அவர் தனது இளம் வயதில் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார்.

1921 ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்திலும் அவர் பங்கேற்றார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு உத்தரப்பிரதேச மாநிலத்தின் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் வகித்த அவர், பின்னர் பிரதமராக பதவி வகித்தார்.

<><><><><><><>

தூய்மையைக் கடைப்பிடிப்பது, ஆக்கப்பூர்வமான சூழலை வளர்ப்பதுடன், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான நடவடிக்கைகளில் மக்கள் நேரிடையாகப் பங்கேற்கவும் உதவுகிறது என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் கூறினார்.

புதுதில்லியில், இந்திய சர்வதேச நடுவர் மையத்தில் தூய்மையே சேவை பிரச்சாரத்தின் ஒருபகுதியாக நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் விழாவில் பங்கேற்ற அவர் இதனைத் தெரிவித்தார்.

திரு நரேந்திர மோடி பிரதமராகப் பொறுப்பேற்றது முதல், நாடு முழுவதும் மகாத்மா காந்தியின் தூய்மை பராமரிப்பிற்கான தொலைநோக்குப் பார்வையை நனவாக்க, தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவருவதாக திரு மேக்வால் குறிப்பிட்டார்.

<><><><><><><>

விமான நிலையங்களில், பயணிகளின் பாதுகாப்பு நடைமுறைகளை விரைவாகவும், எளிதாகவும் மேற்கொள்ளும் வகையில், சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தொடங்கியுள்ளது.

புதுதில்லியில், செய்தியாளர்களிடம் பேசிய மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு சமீர் குமார் சின்ஹா, இதனைத் தெரிவித்தார்.

விமான நிலையங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும், வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும் சிவில் விமானப் பாதுகாப்புப் பணியகத்தின் நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார்.

உயர் பாதுகாப்புத் தர நிலைகளைப் பராமரிக்கவும், பணிகளை டிஜிட்டல்மயமாக்குவதையும், சிறந்த நிர்வாக நடைமுறைகளை உறுதி செய்வதையும் இத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளதாக திரு சமீர் குமார் சின்ஹா கூறினார்.

<><><><><><><>

இந்தியா-பல்கேரியா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவற்கான வாய்ப்புகள் உள்ளதாக வெளியுறவுத்துறை செயலாளர் திரு. சிபிராஜ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் அந்நாட்டு வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. Christo Polendakov உடன் பேச்சு நடத்தினார்.

வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில்நுட்பம், செய்ற்கை நுண்ணறிவு, விண்வெளி, பாதுகாப்பு, கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதித்ததாக திரு. சிபி ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

<><><><><><><>

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதில் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக நித்தி ஆயோக் உறுப்பினர் திரு. ராஜீவ் கவுபா தெரிவித்துள்ளார்.

மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், அதிகரித்து வரும் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

போட்டித்தன்மையை உறுதி செய்வதற்கும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பெறுவதற்கும் நுகர்வோரின் நலன்களை பாதுகாக்கும் வகையிலும் இந்த வாரியம் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவிரும் பதற்றமான புவிசார் சூழலுக்கு இடையே தடையற்ற எரிசக்தி வினியோகத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக திரு. ராஜுவ் கவுபா தெரிவித்துள்ளார்.

<><><><><><><>

மிசோரம் தலைநகர் ஐஸ்வாலில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

சுற்றுலாதலமான சியால்சுக் நகரில் இருந்து ஐஸ்வால் திரும்பும் வழியில் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலை அருகே இருந்த பள்ளத்தில் கவிழ்ந்த தில் இந்த விப்த்து ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்பாலில் உள்ள பத்திரிகை தகவல் அலவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் டாக்டர். ENGAM PANE ஐஸ்வால் தூர்தர்ஷன் தொலைக்காட்சி செய்திப்பிரிவு இயக்குநர் Nampivau Marinmai உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு அமைச்சகம் இரங்கல் தெரிவித்துள்ளது.

<><><><><><><>

பிளை துபாய் விமானத்தின் விமானி கேப்டன் ஸ்மித் மச்சாரின் உடல் நிலை குறித்து உன்னிப்பாகக் கவனித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சவுதி அரேபியாவின் தபூக் நகரில் உள்ள மருத்துவமனையில் முதற்கட்ட மருத்துவ சிகிச்சைக்குப் பின், அவர் தற்போது மேல் சிகிச்சைக்காக அபுதாபியில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்திற்கான இந்தியத் தூதர் மருத்துவமனையில் கேப்டன் மச்சாரைச் சந்தித்து அவரது உடல்நலம் குறித்து விசாரித்தாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

முன்னதாக, அவரது குடும்பத்தினரையும் சந்தித்து, அவருக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும், அபுதாபி மற்றும் துபாயில் உள்ள

இந்தியத் துணைத் தூதரகங்கள் அந்நாட்டு அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

பரஸ்பர நிதிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வூதிய நிதிகள் மூலம் வங்கி நிறுவனங்களில் உள்ள பங்குகளை கையகப்படுத்துவதற்கான ஒப்புதல் நடைமுறைகளை எளிதாக்கும் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான வரைவு நெறிமுறைகள் குறித்து நிறுவனங்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து ஆகஸ்ட் 4-ம் தேதிக்குள் தங்களது கருத்துக்கள், ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு ரிசர்வ் வங்கி கோரியிருந்தது.

இவ்வாறு பெறப்பட்ட கருத்துக்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, பொருத்தமானவற்றை இறுதி வழிகாட்டுதல் நெறிமுறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இந்தத் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகள் உடனடியாக அமலுக்கு வருவதாகவும், வர்த்தக வங்கிகள், சிறு நிதி வங்கிகள், பணப் பரிவர்த்தனை வங்கிகள் மற்றும் ஊரக வங்கிகளுக்கும் இது பொருந்தும் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

<><><><><><><>

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் ஜி-20 வர்த்தக அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் இதனை தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மத்திய அரசின் உணவுப் பாதுகாப்பு கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உணவுப் பொருட்களை எந்தவொரு நாட்டின் மீதும் அழுத்தம் கொடுக்கும் கருவியாக பயன்படுத்தக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

விதிமுறைகளின் அடிப்படையிலேயே பல்வேறு நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் இருக்க வேண்டும் என்று இந்தியாவின் நிலைப்பாட்டை அவர் உறுதிப்பட தெரிவித்தார்.

அமெரிக்கா தலைமையில் நடைபெற்று வரும் ஜி-20 வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தில் உணவுப் பாதுகாப்பு குறித்த விவாதத்தை முன்னிறுத்தியதற்காக திரு. பியூஷ் கோயல் நன்றி தெரிவித்தார்.

<><><><><><><>

ஆசிய விளையாட்டுப் போட்டியில் வில்வித்தையில் மகளிர் ரிக்கர்வ் குழு பிரிவில் இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

அரையிறுதி போட்டியில் அங்கிதா பக்த், கீர்த்தி, கும்கும் மொஹோத் ஆகியோர் அடங்கிய இந்திய குழு 5-1 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவை வென்றது.

மகளிர் ஸ்கிஃப் குழு படகுப் போட்டியில், இந்தியாவின் ஹர்ஷிதா தோமர் - ஷீத்தல் வர்மா அணி வெண்கலப் பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் பதக்கப்பட்டியலில், இந்தியா 10 தங்கம், 23 வெள்ளி மற்றும் 33 வெண்கலப் பதக்கங்களை வென்று 8-வது இடத்தில் உள்ளது.

---------